திரு வி. கே. கோதண்டராமன் : ஆர்.எம்.ஓ.க்கள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆரம்பத்திலேயே சொன்னேன். சிவில் சர்ஜன், பஸ்ட் கிளாஸ் அதிகாரிகளாக இருப்பவர்கள்தான் ஆர்.எம்.ஓ.க்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : மாவட்ட மருத்துவ அதிகாரிகளாக இருப்பவர்களை ஆர்.எம்.ஓக்களாக நியமிப்பதாகத் தெரிகிறது. இவர்கள் சீனியாரிடி அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா அல்லது திறமையின் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது கொஞ்சம் உயர்ந்த பதவியாக இருக்கும் காரணத்தால் நீண்டகால அனுபவம், திறமை இவைகளை எல்லாம் அனுசரித்துத்தான் பதவியில் அமர்த்தப் படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, may I know from the Hon. Minister whether the R.M.O. of the Madras General Hospital is in charge of only administrative activities inside the hospital or is he also in charge of the distribution of medicines as well as in charge of stores and if so, will the Government be pleased to determine the special duties which have to be done by this officer ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ; என்னிடத்திலே இருக்கும் குறிப்பின்படி **He was posted to the administrative side as R.M.O.** என்று இருக்கிறது. நிர்வாகத்திற்காகத்தான் இப்போது ஆர்.எம்.ஓ. போடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி கட்டடம்.

***441 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டிலுள்ள மருத்துவக் கல்லூரியை இட வசதிக் குறைவால் வேறு இடத்திற்கு மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Hosur Government Hospital.

***442—*Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :**

(*a*) whether there is any proposal to increase the bed strength in the Hosur Government Hospital ; and

(*b*) if so, when it will be implemented ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ள **உத்தேசம் இருக்கிறது.**

1969 மார்ச் 24]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to the climatic conditions, the Hosur taluk stands on a different footing. It is very cold there for four months. Our present Hon. Minister for Public Works, who visited the place last year found the patients lying on ground and also on mats and he also expressed sympathy for them. So, keeping these aspects of the matter in the mind, will the Hon. Minister for Public Health be pleased to give top priority and provide beds not only to the hospital in Hosur but also to the hospital at Denkanikotta.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டெங்கனிக் கோட்டை பற்றிய குறிப்பு இல்லை. ஹோசூரில் 44 படுக்கைகள் கொண்ட அவுட் பேஷண்ட் ப்ளாக், லேபர்-கம்-ஆப்பரேஷன் தியேட்டர், இன்பெக் ஷியல் டிவீஸஸ் வார்டு, மார்ச்சுவரி பிளாக், கட்டுவதற்கும், இரண்டு மருத்துவ அதிகாரி இல்லங்களும், ஆறு செவிலியர் இல்லங்களும், இரண்டு மருத்துவத் துணை அதிகாரி இல்லங்களும் கட்டுவதற்குச் செயற்குறிப்புகள் உள்ளது. நிதிப் பற்றாக் குறை காரணமாக 1970-71-ம் ஆண்டில் எடுத் துக் கொள்வதாக குறிப்பு இருக்கிறது.

உதகையில் நடுத்தர வகுப்புப் பயணிகள் விடுதி.

வினா. *443 திரு கே. போஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா.—

(அ) கோடை காலங்களில் உதகைக்கு வரும் நடுத்தர வகுப்புப் பிரயாணிகள் குறைந்த கட்டணத்தில் தங்கக்கூடிய பிரயாணிகள் விடுதி ஒன்று கட்டிக் கொடுக்கும், செயற்குறிப்பு ஏதேனும் சர்க்காரிடம் உள்ளதா

(இ) ஆம் எனில், இந்த விடுதி எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உதகையில், மாணவர்கள், மற்றும் சுற்றுலாப் பயணிகள், இரு வருக்கும் பொதுவாக உதவும் வகையில் ஒரு சுற்றுலாப் பயணிகள்-மாண வர்கள் விடுதி கட்டுவது பற்றிய கருத்து பரிசீலனையில் இருந்து வருகிறது.

(இ) இது எப்போது முடிவுபெறும் என தற்போது கூற இயலாது.

திரு கே. போஜன் : தற்போது உதகையிலுள்ள சர்க்கார் டூரிஸ்டு பங்களாவில் அதிக வருவாய் உள்ளவர்கள்தான் தங்க முடியும். தனிப் பட்டவர்கள் நடத்தும் ஓட்டலிலும் அதிகச் செலவாகிறது. ஆகவே, குறைந்த வருவாய் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக் கிறது. குறைந்தவருவாய் உள்ளவர்கள் தங்கும் அளவுக்கு ஒரு விடுதி ஒன்றை அரசாங்கம் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அங்கே பயணி கள் நிரந்தரமாக ஆண்டு பூராவும் வருவது கிடையாது. ஒரு ஆண்டில் மூன்று மாதங்கள்தான் அங்கு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அதற்காகப் பல பெரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கேற்ற வசதி இல்லை. ஆனால், பருவ காலத்தில் வருகின்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டு மென்பதற்காக ஒரு புதிய திட்டத்தை மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். உதகையில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கான விடுதி ஒன்றைக் கட்டி, பள்ளி நாட்கள் முடிந்த பிறகு அதிலே பயணிகள் தங்குகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு பெரிய கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அதற்காக விஜயநகரம் எஸ்டேட் என்ற பகுதியில் உள்ள இடத்தைக் கேட்டோம். அது உதகை வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம். அவர்கள் அதைத் தர மறுத்துவிட்டார்கள். தற்